# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-


THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 OCTOBER

மலர்: 9 இதழ்: 1 அக்டோபர் 2015 விலை: ரூ. 5

## துய்மையே இறைமார்க்கத்தின் அடிப்படை

## என் மண்ணறை எப்படி இருக்கும்?

## நோயுறும் உள்ளங்களும் இறைவனின் சிகிச்சையும்



# படைத்தவனை ஏற்க மாட்டீர்களா?



56:57. நாமே உங்களைப் படைத்தோம். பிறகு ஏன் நீங்கள் உண்மை என ஏற்றுக்கொள்வதில்லை?
56:58. நீங்கள் செலுத்துகின்ற இந்த இந்திரியத்துளியைப் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?
56:59. இதனைக் கொண்டு குழந்தையை நீங்கள் உருவாக்குகின்றீர்களா அல்லது அதனை உருவாக்குவது நாமா?
56:60. நாமே மரணத்தை உங்களிடையே விதித்திருக்கின்றோம்.
56:61. மேலும், உங்களின் வடிவங்களை மாற்றுவதற்கும் நீங்கள் அறியாத வடிவங்களில் உங்களைப் படைப்பதற்கும் நாம் இயலாதவரல்லர்.
56:62. உங்களின் முதல் பிறப்பைப் பற்றி நீங்கள் அறிந்தே இருக்கின்றீர்கள். பிறகு, ஏன் நீங்கள் படிப்பினை பெறுவதில்லை?



56:63. நீங்கள் விதைக்கின்ற இந்த விதையைப் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?
56:64. இதன் மூலம் பயிர்களை நீங்கள் விளைவிக்கின்றீர்களா? அல்லது நாம் விளைவிக்கின்றோமா?
56:65. நாம் நாடினால் இவற்றைப் பதர்களாய் ஆக்கிவிட்டிருப்போம். அப்போது நீங்கள் பலவாறு புலம்பிக்கொண்டிருப்பீர்கள்
56:66. அனைத்தும் தண்டமாகிவிட்டதே
56:67. நாம் பெரும் துர்ப்பாக்கியவான்களாய் ஆகிவிட்டோமே என்று!

56:68. நீங்கள் பருகும் இந்த நீரை நீங்கள் எப்போதாவது கண்திறந்து பார்த்திருக்கின்றீர்களா?
56:69. மேகத்திலிருந்து இதனை நீங்கள் பொழியச் செய்தீர்களா? அல்லது அதனைப் பொழியச் செய்தது நாமா?
56:70. நாம் நாடினால் இதனை உவர்ப்பு நீராக்கிவிட்டிருப்போம். அப்படியிருக்க நீங்கள் ஏன் நன்றி செலுத்துவதில்லை?



56:71. நீங்கள் எரிக்கின்ற இந்தத் தீயைப் பற்றி எப்போதாவது நீங்கள் எண்ணிப்பார்த்தீர்களா?
56:72. அதன் மரத்தை நீங்கள் படைத்திருக்கின்றீர்களா? அல்லது அதனைப் படைத்தவர் நாமா?
56:73. நாம் இதனை நினைவூட்டும் சாதனமாகவும் தேவையுடையோருக்கு வாழ்க்கைச் சாதனமாகவும் அமைத்துள்ளோம்.
56:74. எனவே (நபியே!) மகத்துவமிக்க உம் இறைவனின் பெயரைத் துதிப்பீராக!

(திருக்குர்ஆன் வசனங்கள்)

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

-சமூக சீர்திருத்த மாத இதழ்-

**THIRU QURAN NARCHEYDHI MALAR - 2015 OCTOBER**

**மலர்: 9 இதழ்: 1 அக்டோபர் 2015 விலை: ரூ. 5**

## பொருளடக்கம்

| | |
|---|---|
| இறைநம்பிக்கையை தூய்மைப்படுத்துவோம் | 2 |
| சிலைவணக்கம் எங்கு சென்று முடிகிறது? | 5 |
| சிலைவழிபாடு செய்தோரின் மறுமை நிலை | 8 |
| தூய்மையே இறைமார்க்கத்தின் அடிப்படை | 9 |
| பல்துலக்குதலும் சவரமும் கூட வழிபாடுதான்! 1 | 10 |
| சுற்றுப்புற சூழலை மாசுபடுத்துவோருக்கு எச்சரிக்கை! | 11 |
| சுற்றுபுறத் தூய்மையும் நம் கடமையே! | 12 |
| தொழுகைக்கு முன் தூய்மை | 13 |
| தூய்மைக்கான விதிமுறைகள் | 14 |
| கழிப்பறை ஒழுங்குகளும் கற்றுத் தந்தார் எங்கள் நபி! | 16 |
| ஈடில்லா கருணையாளனே இறைவன் | 18 |
| நோயுறும் உள்ளங்களும் இறைவனின் சிகிச்சையும் | 20 |
| என் மண்ணறை எப்படி இருக்கும்? | 22 |
| ஏன் அவர் மதவெறியராக சித்தரிக்கப்படுகிறார்? | 24 |

published from

**House of Peace,**

PO Box No.1726

# 8, 4th main, 2nd cross, LB Sastry Nagar,

Bangalore 560 017 - Ph. 9886001357

**ஆசிரியர் உரை**

# இறைநம்பிக்கையை தூய்மைப்படுத்துவோம்

பொதுவாக நம் வாழ்க்கை அமைதியாகச் சென்று கொண்டிருக்கும்போது நமக்கு உண்மை இறைவனைப் பற்றிய நினைப்பு வருவதில்லை. அவன் நமக்கு வழங்கிவரும் எண்ணற்ற அருட்கொடைகளுக்கு நன்றிக்கடன் பட்டவர்களாக இருக்கிறோம் என்பதையும் மறந்துவிடுகிறோம். நாட்டு வழக்கம் என்றும் முன்னோரின் வழக்கம் என்றெல்லாம் சொல்லி நம்மில் பலரும் இறைவன் அல்லாதவற்றை எல்லாம் வணங்கி வரும் பழக்கம் உடையவர்களாக உள்ளோம். இதன் விபரீதத்தை உணராமலேயே காலத்தைப் போக்கியவர்களாக வாழ்ந்து கொண்டு வருகிறோம். இது பற்றி சிந்திக்க நாம் நேரமும் ஒதுக்குவதில்லை.

ஆனால் திடீரென்று ஒரு நோயின் காரணமாகவோ விபத்தின் காரணமாகவோ அல்லது வியாபாரம் அல்லது தொழிலில் ஏற்படும் திடீர் இழப்புகளின் காரணமாகவோ வாழ்க்கை தடம்புரளும்போது நிராசை அடைகிறோம். யாராவது உதவ மாட்டார்களா என்று ஏங்குகிறோம். அப்போதும் இடைத்தரகர்களை அணுகி மீணடும் இறைவன் அல்லாதவற்றின் முன்னால் சென்று அதிகம் அதிகமாகக் காணிக்கைகளும் நேர்ச்சைகளும் செய்து மன்றாடுகிறோம். உண்மை இறைவன்பால் ஏனோ திரும்ப மறுக்கிறோம். ஆனால் உண்மை இறைவனோ நம்மைத் தன்பால் அழைக்கிறான். அதாவது நம்மை அழகிய உருவத்தில் செம்மையாக வடிவமைத்து நமக்கு வேண்டிய தேவைகளை எல்லாம் குறைவின்றி வழங்கி பரிபாலித்து வரும் அந்தக் கருணையாளன் தன் அருள்மறையில் கேட்கிறான்:

82:6~8 மனிதனே! அருட்கொடையாளனாகிய உன் இறைவனைக் குறித்து உன்னை ஏமாற்றத்தில் வீழ்த்தியது எது? அவனே உன்னைப் படைத்தான் உன்னைக் குறைகள் எதுவுமின்றிச் செம்மைப்படுத்தினான் உனக்குப் பொருத்தமான உறுப்புகளை அளித்தான்.மேலும், தான் நாடிய உருவத்தில் உன்னை ஒருங்கிணைத்து உண்டாக்கினான்.

அவன் நம்மை நேரடியாக அவனிடமே அழைத்துப் பிரார்த்திக்குமாறு பணிக்கிறான்.

2:186 (நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால் "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன் பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன் அவர்கள் என்னிடமே(பிரார்த்தித்துக்) கேட்கட்டும் என்னை நம்பட்டும். அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள்" என்று கூறுவீராக.

நாம் அவனுக்கு நன்றி கூறி அவனை நேரடியாக வணங்குவதற்கு பதிலாக அவனது படைப்பினங்களுக்கு தலைசாய்ப்பதும் அவன் அல்லாத எவற்றையும் கடவுள் என்று அழைப்பதும் இடைத்தரகர்களை நாடுவதும் அவனது கட்டளைக்கு மாறு செய்யும் செயலாகும். அது சர்வவல்லமை மிக்க அவனை சக்தியற்ற படைப்பினங்களுக்கு ஒப்பாக்கி சிறுமைப்படுத்தும் செயலாகும். இவ்வாறு இறைவனைப்பற்றிய மதிப்பை (seriousness) சிதைத்து விடுவதால் மனித உள்ளங்களில் இறையச்சம் அகன்றுபோய் சமூகத்தில் பாவங்கள் பெருக இது காரணமாகிறது.



பல பாவங்களுக்கு இது தூண்டுகோலாக இருப்பதாலும், கடவுளின் பெயரால் மக்களைச் சுரண்ட வழி வகுப்பதாலும் மனிதகுலத்தில் ஜாதி, மதம் என்று பிளவுகள் உண்டாகக் காரணமாவதாலும் இப்பாவம் பாவங்களிலேல்லாம் மிகப்பெரிய பாவமாகும். இதை மட்டும் இறைவன் ஒருபோதும் மன்னிப்பதில்லை என்கிறது திருக்குர்ஆன்.

## இரட்டை நிலை:

போலியான கடவுள்களை வணங்குவோரின் இரட்டை நிலையை இறைவன் கடலில் பயணம் செய்யும் மனிதர்களின் உதாரணத்தின் மூலம் விளக்குகிறான். :

10:22. தரையிலும், கடலிலும் உங்களை இயங்கச் செய்பவன் அவனே! பிறகு, நீங்கள் கப்பல்களில் ஏறி, சாதகமாக வீசும் காற்றோடு மகிழ்ச்சிபூர்வமாக பயணம் செய்து கொண்டிருக்கும்போது திடீரென்று கடுமையான எதிர்க்காற்று வீசுகிறது. மேலும், எல்லாப் பக்கங்களிலிருந்தும் அலைகள் தாக்குகின்றன. அப்பொழுது தாம் கடும் பிரளயத்தால் சூழப்பட்டுள்ளதாகப் பயணிகள் எண்ணுகிறார்கள். அந்நேரத்தில் அவர்கள் கீழ்ப்படிதலை (மார்க்கத்தை) அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தாக்கி, "(இறைவா!) இத்துன்பத்திலிருந்து நீ எங்களைக் காப்பாற்றினால் திண்ணமாக நாங்கள் நன்றியுடையவர்களாய் இருப்போம்" என்று அவனிடம் இறைஞ்சுகின்றார்கள்.

(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்று பொருள்)

அப்படிப்பட்ட உயிருக்கு ஆபத்தான ஒரு சூழ்நிலை வரும்போது மக்கள் அன்றாடம் வணங்கி வந்த தெய்வங்கள் அனைத்தையும் மறந்துவிடுவார்கள். கரையில் அவர்கள் வணங்கிவந்த படங்களையும் உருவங்களையும் சமாதிகளையும் மனக்கண்முன் கொண்டுவந்து "இன்னவரே எங்களைக் காப்பாற்று" என்று மன்றாட முனைவதில்லை. இன்று உண்மை இறைவன் எவனோ அவன் மட்டுமே நம்மைக் காப்பாற்ற முடியும் எனபதை உளமார உணர்கிறார்கள். தூய்மையான உள்ளத்தோடு படைத்தவனை அழைத்துப் பிரார்த்திக்கிறார்கள். பிரார்த்தனைகளுக்கு பதிலளிக்கவும் அவனால் மட்டுமே முடியும் என்பதையும் கரையிலும் கடலிலும் எங்கும் வணங்குவதற்குத் தகுதிவாய்ந்த இறைவன் அவன்மட்டுமே என்பதையும் உளமார அப்போது உணர்கிறார்கள்.

## கரைசேர்ந்த பிறகு நன்றிகேடு

ஆனால் அந்த இறைவன் அவர்களின் மன்றாட்டத்தை ஏற்றுக் கொண்டு அவர்களைக் காப்பற்றினாலோ கரைசேர்ந்த பிறகு நன்றி மறந்துவிடுகிறார்கள். மீணடும் பழையபடியே போலி தெய்வங்கள்பால் திரும்பி விடுகிறார்கள். இப்போக்கை இறைவன் தோலுரித்துக் காட்டுகிறான்:

17:67 இன்னும் கடலில் உங்களை ஏதேனும் சங்கடம் (துன்பம்) தீண்டினால், அவனையன்றி நீங்கள் (தெய்வங்கள் என) எவற்றை அழைத்துக் கொண்டிருந்தீர்களோ, அவையாவும் மறைந்து விடும் எனினும் (அல்லாஹ்) உங்களை ஈடேற்றிக் கரையளவில் கொண்டு வந்து சேர்க்கும் பொழுது நீங்கள் (அவனைப்)

புறக்கணித்து விடுகிறீர்கள் ~இன்னும் மனிதன் மகா நன்றி மறப்பவனாகவே இருக்கின்றான்.

ஆனால் இறைவனின் பிடியில் இருந்து அவர்கள் தப்பித்து விட்டதாகவும் அவனை ஏமாற்றி விட்டதாகவும் அவர்கள் கருத வேண்டாம் என்று கூறுகிறான் இறைவன்:

17:68 (கரை சேர்ந்த) பின் அவன் உங்களை பூமியின் ஒரு புறத்தில் புதையும்படி செய்து விட மாட்டான் என்றொ அல்லது உங்கள் மீது கல்மாரியை அனுப்பமாட்டான் என்றோ அச்சந் தீர்ந்து இருக்கிறீர்களா? பின்னர் நீங்கள் உங்களைப் பாதுகாப்போர் எவரையும் காண மாட்டீர்கள்.

17:69 அல்லது அவன் மீண்டும் ஒரு தடவை அக்கடலில் உங்களை மீளச் செய்து, (எல்லாவற்றையும்) முறித்துத் தள்ளும் புயல் காற்றை உங்கள் மீதனுப்பி, நீங்கள் நிராகரித்ததற்காக உங்களை மூழ்கடித்து விடமாட்டான் என்றும் நீங்கள் அச்சந்தீர்ந்து இருக்கிறீர்களா? (அப்படி நேர்ந்தால் ஏன் இவ்விஷயத்தை அவ்வாறு செய்தோம் என) நம்மைத் தொடர்ந்து உங்களுக்காக(க் கேட்போர்) எவரையும் காணமாட்டீர்கள்.

உங்களைப் பரீட்சிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறுகிய வாழ்க்கை இது. இவ்வுலகம் ஒருநாள் அழியும். மீணடும் உங்களை விசாரிப்பதற்காகவும் உங்கள் வினைகளுக்குக் கூலி கொடுப்பதற்காகவும் இறுதித் தீர்ப்பு நாள் அன்று நீங்கள் எல்லோரும் எழுப்பப்பட இருக்கிறீர்கள் என்ற உண்மையை இறைவன் நினைவூட்டுகிறான்.

10:23. ஆயினும் அல்லாஹ் அவர்களைக் காப்பாற்றிவிட்டாலோ, உடனே அவர்கள் சத்தியத்திற்கு எதிராக பூமியில் வரம்பு மீறி நடக்கத் தலைப்பட்டு விடுகின்றார்கள். மக்களே! உங்களுடைய இந்த வரம்பு மீறுதல் உங்களுக்குத்தான் கேடு விளைவிக்கும். உலக வாழ்வின் அற்ப இன்பங்களை அனுபவித்துக் கொள்ளுங்கள். பிறகு நீங்கள் நம்மிடமே திரும்ப வரவேண்டியுள்ளது. அப்போது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை நாம் உங்களுக்கு அறிவித்து விடுவோம்.

10:24. (எந்த உலக வாழ்க்கையின் போதையில் மயங்கி நம் சான்றுகள் குறித்து நீங்கள் அலட்சியமாக இருக்கின்றீர்களோ அந்த) உலக வாழ்க்கையின் உதாரணம் இதைப் போன்றதாகும்: நாம் வானத்திலிருந்து மழையை இறக்கினோம் பின்னர் அதன் மூலம் மனிதர்களும் கால்நடைகளும் உண்ணக்கூடிய பூமியின் விளைபொருள்கள் நன்கு அடர்த்தியாக வளர்ந்தன. பூமி அழகாகவும், செழுமையாகவும் காட்சியளிக்க, அதன் பலனை அடைந்திட தாங்கள் ஆற்றல் பெற்றுள்ளோம் என அதன் உரிமையாளர்கள் எண்ணிக் கொண்டிருந்த அதே நேரத்தில் திடீரென இரவிலோ, பகலிலோ நம்முடைய கட்டளை வந்துவிட்டது! மேலும், நேற்று வரை எதுவும் அங்கு விளைந்திருக்காதது போல அதனை முற்றாக நாம் அழித்து விட்டோம். சிந்தித்துணரும் மக்களுக்கு இவ்வாறு சான்றுகளை மிகத் தெளிவாக நாம் விளக்குகின்றோம்.

ஆம், நீர்க்குமிழி போன்ற இவ்வாழ்வை நிரந்தரம் என்றெண்ணி ஏமாந்து விடாதீர்கள் என்று எச்சரிக்கிறான் இறைவன். மாறாக சொர்க்கத்திற்குச் செல்லும் நேர்வழி கோரிப் பிரார்த்திப்போருக்கு அதன்பால் வழிகாட்டக் காத்திருப்பதாகவும் இறைவன் கூறுகிறான்:

10:25. அல்லாஹ் உங்களை அமைதி இல்லத்திற்கு (சொர்க்கத்திற்கு) அழைத்துக் கொண்டிருக்கின்றான். தான் நாடுவோர்க்கு அவன் நேர்வழி அளிக்கின்றான்.



# சிலைவணக்கம் எங்கு சென்று முடிகிறது?

மனித வாழ்விலும் சமூகத்திலும் நல்லொழுக்கம் பேண வேண்டுமானால் அங்கு முறையான இறையச்சம் தேவை. அதாவது இறைவன் தன்னைக் கண்காணித்துக்கொண்டிருகிறான், அவனிடமே இறுதியில் மீள உள்ளோம், அவனிடம் நம் செயல்களுக்கும் விளைவுகளுக்கும் விசாரணையும் தொடர்ந்து நற்செயல்களுக்கு பரிசும் பாவங்களுக்கு தண்டனையும் கிடைக்க உள்ளன என்ற உணர்வு சதா மனிதனுள் இருக்கவேண்டும். அப்படி ஒரு உணர்வு ஏற்பட வேண்டுமானால் அங்கு சீரான இறை நம்பிக்கை போதிக்கப் படவேண்டும். இவ்வுலகைப் படைத்து பரிபாலித்து வரும் சர்வவல்லமை கொண்ட இறைவன் மட்டுமே உண்மையான வணக்கத் திற்குரியவன் என்பதையும் அவன் அல்லாத எவற்றையும் கடவுள் என்று சொல்வதோ வணங்குவதோ வீணும் பாவமும் ஆகும் என்பதை மக்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆனால் இறைவன் அல்லாதவற்றையெல்லாம் காட்டி கடவுள் என்று கற்பிப்பதன் விளைவாக மக்களிடம் இருந்து இறைவனைப்பற்றிய மதிப்பு சிதைந்து போவதால் இறையச்சம் அகன்றுபோய் சமூகத்தில் பாவங்கள் மலிகின்றன. அதனால் அதர்மம் தலைதூக்கி குழப்பங்களும் கலகங்களும் உருவாகி மக்கள் வாழவே வெறுக்கும் நிலை உருவாகிறது. தேசிய குற்றவியல் ஆவணக் காப்பகத்தின் சமீபத்திய அறிக்கைப்படி இந்தியாவில் ஒவ்வொரு 4 நிமிடத்திற்கும் 30 வயதிற்கு உட்பட்ட ஒருவர் தற்கொலை செய்கிறார் என்னும் தகவல் நம் அனைவருக்கும் அதிர்ச்சியூட்டுவதாக உள்ளது.

## தொன்றுதொட்டு தொடரும் கலாச்சாரம்

தூய இறைநம்பிக்கையை மக்களுக்குக் கற்றுக்கொடுக்க இறைவன் தன் தூதர்களையும் வேதங்களையும் பூமியின் பல்வேறு பாகங்களுக்கு அனுப்பினான். ஆனால் ஷைத்தானின் தூண்டுதலால் அவ்வாறு வந்த இறைதூதர்களுக்கும் இன்ன பிற நல்லோர்களுக்கும் அவர்களின் மறைவுக்குப் பின் மக்கள் சிலைகளை எழுப்பி வணங்க ஆரம்பித்தார்கள். கடவுளின் பெயரால் மக்களைச் சுரண்ட முற்பட்ட இடைத்தரகர்களும் ஆதிக்க சக்தியினரும் சிலைவழிபாட்டை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள். 5000 வருடங்களுக்கு முன் அவ்வாறு மக்களை சீர்திருத்த வந்த இறைத்தூதர்களில் ஒருவரான இப்ராஹீம் என்ற இறைத்தூதரின் சுவையான வரலாற்றை சுருக்கமாகக் கூறுகிறது திருக்குர்ஆன்:

## கோவில் பூசாரி மகன் இப்ராஹீம்

26:69. மேலும், இப்ராஹீமின் சரிதையை இவர்களுக்கு எடுத்துரையுங்கள்.

26:70. ஒருபோது அவர்தம் தந்தையிடமும், சமூகத்தாரிடமும், "எவற்றை நீங்கள் வணங்கிக் கொண்டிருக்கின்றீர்கள்?" என்று கேட்டார்.

26:71. அதற்கு அவர்கள் “சிலைகளை நாங்கள் பூஜிக்கின்றோம் மேலும், அவற்றிற்கு சேவை செய்வதில் முழுமையாக ஈடுபட்டிருக்கின்றோம்” என்று பதில் கூறினார்கள்.

கோவில் பூசாரியின் மகனாகப் பிறந்த இப்ராஹீமுக்கு பகுத்தறிவு சிந்தனை இருந்ததால் அவரது மனம் அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்தது. மக்கள் சிந்தித்து உண்மையை உணரும்விதமாக கேள்விக்கணைகளைத் தொடுத்தார்.

26:72~73. அதற்கு அவர் கேட்டார்: “நீங்கள் அழைக்கும்போது உங்கள் அழைப்பை இவை கேட்கின்றனவா? அல்லது இவை உங்களுக்கு ஏதேனும் இலாபமோ, நஷ்டமோ அளிக்கின்றனவா?”

26:74. அதற்கு அவர்கள் பதிலளித்தார்கள்: “இல்லை. ஆயினும், எங்கள் முன்னோர் இவ்வாறே செய்து கொண்டிருப்பதை நாங்கள் கண்டோம்.”

26:75~ 76 அதற்கு இப்ராஹீம் கூறினார்: “எவற்றை நீங்களும், உங்களுடைய முற்காலத்து மூதாதையர்களும் வணங்கிவந்தீர்களோ ,அவற்றை நீங்கள் என்றாவது (கண்திறந்து) பார்த்திருக்கின்றீர்களா?

## உண்மை இறைவன் யார்?

தொடர்ந்து இப்ராஹீம் உண்மை இறைவனைப் பற்றி அவர்களுக்கு அறிவுபூர்வமாக எடுத்துரைத்தார்:

26:77. “என்னைப் பொறுத்தவரை திண்ணமாக, இவை அனைத்தும் விரோதிகளாகும் ஆனால், அகிலங்களின் அதிபதியைத் தவிர!

26:78. அவன் எத்தகையவனெனில், அவன்தான் என்னைப் படைத்தான் மேலும், அவனே எனக்கு பின்னர் வழிகாட்டுகின்றான்.

26:79. எனக்கு உண்ணவும் அருந்தவும் தருகின்றான்.

26:80. மேலும், நான் நோயுற்றால் அவனே எனக்கு குணமளிக்கின்றான்.

26:81. அவனே என்னை மரணிக்கச் செய்வான் பின்னர் மீண்டும் எனக்கு வாழ்வளிப்பான்.

26:82. மேலும், கூலி கொடுக்கப்படும் நாளில் அவன் என் பாவங்களை மன்னித்தருள்வான் என்று நான் அவனிடமே நம்பிக்கை கொண்டுள்ளேன்.”



மூதாதையர் கற்பித்த மூடப் பழக்க வழக்கங்களிலும் சிலைவழிபாட்டிலும் மூழ்கிக் கிடந்த தம் நாட்டு மக்களை பகுத்தறிவு கொண்டு உண்மையை போதிக்க பலவாறு முயற்சித்தார் இப்ராஹீம். அனைத்து முயற்சிகளும் தோல்வியைத் தழுவின. சிந்திக்க மறுத்த மக்களும் அவர் தந்தையும் அவரைக் கடுமையாக எதிர்த்தனர். இறைவன் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்த இப்ராஹீம் தனிநபராக நின்று உறுதியாகப் போராடினார். இறுதியில் அந்நாட்டு அரசனால் பெரும் தீக்கிடங்கில் எறியப்பட்டார். ஆனால் இறையருளால் அதில் இருந்தும் அற்புதமான

முறையில் காப்பாற்றப் பட்டார்.

இறைவனிடம் தன் பிரார்த்தனைகளை முன்வைத்து ஆத்மார்த்தமாக இறைஞ்சினார் இப்ராஹீம்:

26:83. இப்ராஹீம் இறைஞ்சினார்: "என் இறைவனே! எனக்கு நீ நுண்ணறிவுத்திறனை வழங்குவாயாக! மேலும், என்னை உத்தமர்களோடு சேர்த்து வைப்பாயாக!

26:84. மேலும், பிற்கால மக்களிடையே எனக்கு உண்மையான புகழை வழங்குவாயாக!

26:85. மேலும், அருட்கொடைகள் நிரம்பிய சுவனத்தின் வாரிசுகளுள் என்னையும் ஒருவனாக ஆக்குவாயாக!

26:86. மேலும், என் தந்தையை மன்னிப்பாயாக! திண்ணமாக, அவர் வழிகெட்டுப் போனவர்களில் ஒருவராய் இருக்கின்றார்.

26:87. மேலும், மனிதர்கள் அனைவரும் உயிர் கொடுக்கப்பட்டு எழுப்பப்படும் நாளில் என்னை இழிவுபடுத்திவிடாதே!"

இன்று நாம் காணும் உலகம் அழிந்து மீண்டும் அனைவரும் விசாரணைக்காக எழுப்பப்படும் இறுதித்தீர்ப்பு நாளின் நிகழ்வுகள் குறித்து வருந்தினார். புண்ணியவான்களுக்கு நிரந்தர இருப்பிடமாக சொர்க்கமும் பாவிகளுக்கு நரகமும் விதிக்கப்படும் நாளல்லவா அது! நாளைய நமது இருப்பிடத்தை தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட தற்காலிக பரீட்சைக் கூடமல்லவா இவ்வுலகு!

26:88. "அந்நாளில், செல்வமும், பிள்ளைகளும் எவ்விதப் பயனும் அளித்திடமாட்டா.

26:89. ஆனால், எந்த மனிதர் தூய்மையான உள்ளத்தோடு இறைவனின் சமூகத்திற்கு வருகை தருகின்றாரோ அவரைத் தவிர!"

26:90. (அந்நாளில்) சொர்க்கம் இறையச்சமுடையவர்களின் அருகில் கொண்டுவரப்படும்.

26:91. வழிகெட்டுப் போனவர்களின் முன்னிலையில் நரகம் திறந்து வைக்கப்படும்.

இன்று நாம் வாழ்க்கைக்கு அப்பால் ஒன்றுமே இல்லை, மரணத்திற்குப்பின் மண்ணாகி மண்ணாகப் போய்விடுவோம், இங்கு எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்துவிட்டுப் போகலாம், எதை வேண்டுமானாலும் வணங்கலாம், வணங்காமலும் இருக்கலாம், எல்லாம் ஒன்றுதான் என்று தான்தோன்றித்தனமாக வாழ்ந்தவர்களுக்கு மறுமை நாள் என்பது அதிர்ச்சியூட்டும் நாளாக இருக்கும். அந்நாளின் பயங்கரங்களை நேருக்குநேர் காண்பார்கள். இறைவனுக்குச் சொந்தமான உலகில் இறைவனுக்கு நன்றி மறந்து தன்னிச்சையாக வாழ்ந்ததன் காரணமாக அடைய இருக்கும் தண்டனைகளை கண்கூடாகக் காண்பார்கள் அவர்கள்.

## அந்நியப் பெண்களோடு எச்சரிக்கை!

நபி(ஸல்) அவர்கள், "(அந்நியப்) பெண்கள் இருக்குமிடத்திற்குச் செல்ல வேண்டாம் என உங்களை நான் எச்சரிக்கிறேன்" என்று கூறினார்கள். அப்போது மதீனாவாசி ஒருவர், "அல்லாஹ்வின் தூதரே! கணவருடைய (சகோதரன் போன்ற) உறவினர்கள் (அவள் இருக்கும் இடத்திற்குச் செல்வது) குறித்து தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?" என்று கேட்டார். நபி (ஸல்) அவர்கள், "கணவருடைய (சகோதரன் போன்ற) உறவினர்கள் மரணத்திற்கு நிகரானவர்கள்" என்று கூறினார்கள் *அறிவிப்பவர்: உக்பா பின் ஆமிர் (ர) நூல்: புகாரி 5232*

# சிலைவழிபாடு செய்தோரின் மறுமை நிலை

படைத்த இறைவனை விடுத்து சிலைகளையும் மனிதர்களையும் தெய்வங்களாக பாவித்து வணங்கியோருக்கு மறுமையில் என்ன நடக்கும் என்பதை திருக்குர்ஆன் படம்பிடித்துக் காட்டுகிறது. அன்று யதார்த்தங்கள் விசுவரூபம் எடுக்கும் வேளை அவற்றை நேரில் காணும்போது அவர்களின் கையறுநிலையை பின்வரும் வசனங்கள் கூறுகின்றன:

26:92~93. மேலும், அவர்களிடம் வினவப்படும்: "நீங்கள் வணங்கி வந்த தெய்வங்கள் எங்கே? நீங்கள் அல்லாஹ்வை விடுத்து வணங்கி வந்தீர்களே அந்தத் தெய்வங்கள் எங்கே? அவை உங்களுக்கு ஏதேனும் உதவி செய்து கொண்டிருக்கின்றனவா? அல்லது அவற்றால் தம்மையேனும் காப்பாற்றிக் கொள்ள முடிகிறதா?"

26:94. பின்னர் அந்த தெய்வங்களும், வழிகெட்டுப் போனவர்களும்,

26:95. இப்லீசின்(ஷைத்தான்களின் தலைவனின்) சேனைகளும் அனைவரும் நரகில் தலைகீழாக எறியப்படுவார்கள்!

26:96. அங்கு இவர்கள் அனைவரும் தமக்கிடையே சண்டையிட்டுக் கொள்வார்கள்.

26:97. வழி தவறியவர்கள் (தங்கள் தெய்வங்களிடம்) கூறுவார்கள்: "இறைவன் மீது ஆணையாக! நாங்கள் வெளிப்படையான வழிகேட்டிலிருந்தோம்.

26:98. அகிலங்களின் அதிபதியுடன் உங்களுக்கு சரி சமமான தகுதியை நாங்கள் வழங்கிக் கொண்டிருந்தபோது!

26:99. குற்றவாளிகள்தாம் எங்களை இந்த வழிகேட்டில் தள்ளி விட்டார்கள்.

26:100. இப்போது, எங்களுக்குப் பரிந்துரை செய்பவர்கள் யாரும் இல்லை!"

26:101. உற்ற நண்பர் எவருமிலர்.

26:102. அந்தோ! மீண்டும் ஒருமுறை எங்களுக்குத் திரும்பிச் செல்ல வாய்ப்புக் கிடைத்தால், நாங்கள் நம்பிக்கையாளர்களாய்த் திகழ்வோமே!"

26:103. திண்ணமாக, இதில் பெரியதொரு சான்று இருக்கின்றது. ஆயினும், இவர்களில் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் அல்லர்.

நமது மூதாதையர்களும் நமது பின்தோன்றல்களும் மீண்டும் உயிர்பெற்று சங்கமிக்கப் போகும் நாள் இறுதித்தீர்ப்பு நாள்! இன்று நாம் அனைவரும் இந்த உலகமாம் பரீட்சைக் கூடத்தில் எழுதிக்கொண்டிருக்கும் பரீட்சையின் முடிவுகள் வெளியாகும் நாள் அது! அன்று படைத்தவனை விடுத்து படைப்பினங்களையும் மனித கற்பனைகளையும் வணங்கிக் கொண்டி ருந்தோரும் அவர்களின் தலைவர்களும் அவர்களை வழிகேடுத் தோரும் என அனைவரும் நரகத்தில் முகங்குப்புற வீழ்வார்கள் என்பதையும் அவர்களுக்குள் நாளை நடைபெறும் உரையாடல்களையும் முக்காலத்தையும் ஒருசேரக் காணும் இறைவன் இன்றே நமக்கு படம்பிடித்துக்காட்டுகிறான்.
எதற்காக?

நம்மில் இந்த தவறுகளைச் செய்துகொண்டிருப்போர் இதுவரைச் செய்த பாவங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் மன்னிப்பு கோரி அவனிடம் திரும்புவதற்காகவும் திருந்தி வாழ்வதற்காகவும் வேண்டி!

26:104. மேலும், திண்ணமாக உம் இறைவன் மிக வலிமை வாய்ந்தவனாகவும் பெரும் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்.

# தூய்மையே இறைமார்க்கத்தின் அடிப்படை

இறைமார்க்கத்தில் இணையும்போது முதல் கடமை கொள்கைப் பிரகடனம். அதாவது, வணங்குவதற்கு உரியவன் படைத்த இறைவனைத்தவிர வேறு யாருமில்லை என்பதையும் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் இறைவனின் தூதர் என்பதையும் மனதார ஏற்று அதை வாயால் மொழிதலாகும். அவ்வாறு ஏற்றுக் கொண்டவர்களுக்கு இறைவன் விதிக்கும் இரண்டாம் கடமை தினசரி ஐந்து வேளை தொழுகை ஆகும். தொழுகையின்போது உடல், உடை, இடம் ஆகிய அனைத்தும் மலம், மூத்திரம், இரத்தம், சீழ், விந்து போன்ற அசுத்தங்களில் இருந்து முழுக்க முழுக்க தூய்மையாக இருக்க வேண்டும்.

## அனைத்துக்கும் தூய்மையே அடித்தளம்

இஸ்லாம் தூய்மைக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்குகிறது. தூய்மையற்ற எந்தச் செயலும், வணக்கமும் இறைவனால் அங்கீகரிக்கப்படுவதில்லை. இறைவன் தூய்மையானவன். அவன் தூய்மையை விரும்புகிறான்.

- 'இறைவன் தீமையிலிருந்து விலகியிருப்போரையும், தூய்மையாயிருப்போரையும் விரும்புகிறான்.' என அல்குர்ஆன் (2:222) கூறுகிறது.
- 'தூய்மை இறைநம்பிக்கையின் பாதி' என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்:திர்மிதி)
- மேலும் 'தூய்மையற்றவனின் வணக்கம் (இறைவனால்) ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை' எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (ஆதாரம்:முஸ்லிம்)

இதிலிருந்தே இஸ்லாம் தூய்மைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவமும், முதலிடமும் கொடுக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அது மட்டுமல்ல., அதை அனைத்துச் செயலுக்கும், வணக்கத்திற்கும் அடிப்படையாகவும் விதியாகவும் அமைத்துள்ளது.

## எதிலும் தூய்மை !

இஸ்லாம் தூய்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு வாழ்க்கை நெறியாகும். அது எப்போதும் எதிலும் மனிதன் தூய்மையாக இருக்கவேண்டும் எனக் கட்டளையிடுகிறது.

எனவே, மனித வாழ்வில் உளத் தூய்மை, உடற் தூய்மை, இடத் தூய்மை. உடைத் தூய்மை, உடைமைத் தூய்மை, சொல் தூய்மை, செயல் தூய்மை, வணிகத் தூய்மை, வாழ்வுத் தூய்மை, வணக்கத் தூய்மை என அனைத்திற்கும் 'தூய்மையே அடித்தளம்' என ஓர் உயரிய அளவுகோலை மனித சமுதாயத்திற்கு முன்வைக்கிறது இஸ்லாம்.

## பாவங்களைப் போக்கும் அருமருந்து

தூய்மை பாவங்களைக் களைந்து மனிதனை பக்குவப்படுத்துகிறது. தூய வாழ்வுக்கு வழிநடத்திச் செல்கிறது. ஆன்மீகப் பாதையில் பீடுநடை போட ஊக்குவிக்கிறது.

நபிகளாரின் பின் வரும் பொன் மொழி சிந்திக்கத்தக்கதாகும்:

ஒரு முஸ்லிம் உளூ செய்யும் போது முகத்தைக் கழுவினால் அவன் முகத்திலிருந்து கண்கள் செய்த பாவங்கள் அனைத்தும் தண்ணீரின் கடைசிச்சொட்டுடன் வெளியேறி

விடுகின்றன. அவன் கைகளைக் கழுவினால் கைகள் செய்த தவறுகள் அனைத்தும் தண்ணீரின் கடைசிச்சொட்டுடன் வெளியேறி விடுகின்றன. அவன் கால்களைக் கழுவினால் கால்கள் (மூலம் நடந்து சென்று) செய்த குற்றங்கள் யாவும் தண்ணீரின் கடைசிச்சொட்டுடன் வெளியேறி விடுகின்றன. இறுதியில் அவன் (இறைவன் பாதையில் அடியெடுத்து வைத்து தெய்வீக நெறி நிற்பதால்) குற்றமற்றவனாக ஆகிவிடுகிறான்.

(ஆதாரம் : முஸ்லிம், நஸாயீ)

('உளூ' என்பது தொழுகைக்காக கை,கால்,முகம் போன்ற வெளி உறுப்புகளைக் கழுவித் தூய்மையாக்குவதற்கு சொல்லப்படும்.)

# பல்துலக்குதலும் சவரமும் கூட வழிபாடுதான்!

இஸ்லாத்தைப் பொறுத்தவரை வாழ்க்கையே வழிபாடு வழிபாடே வாழ்க்கை. இறைவனின் பொருத்தத்தை நாடி செய்யப்படும் ஒவ்வொன்றும் இறைவழிபாடாகவே கற்பிக்கிறது இஸ்லாம். நாம் வழக்கமாக செய்யும் செயல்களை நமக்கு வாழ்க்கை வழிகாட்டியாக இறைவனால் அனுப்பப்பட்ட நபிகளாரின் முன்மாதிரிப்படி செய்யும்போது அவை வழிபாடாகவே கணக்கிடப்பட்டு நமது கணக்கில் புண்ணியங்களாக எழுதப்படுகின்றன.

உடல் தூய்மை சம்பந்தமான சில உதாரணங்களைப் பார்ப்போம்.

**பல் துலக்குதல்**

பல் துலக்கி வாய் கொப்பளிப்பதால் வாயினுள் உள்ள பல நுண்கிருமிகள், பாக்டீரியாக்கள் அகற்றப்படுகின்றன. இதன் மூலம் காய்ச்சல், வயிற்றுக் கோளாறு உள்ளிட்ட பல நோய்கள் வருவது தடுக்கப்படுகின்றன.

● "பல் துலக்குவது பற்றி அதிகமாக நான் உங்களை வலியுறுத்தியுள்ளேன்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர்: அனஸ் (ரலி), புகாரீ 888

● "பல் துலக்குதல் வாயைச் சுத்தப்படுத்தும் இறைவனின் திருப்தியைப் பெற்றுத் தரும்" எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளனர்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நஸயீ 5, அஹ்மத் 23072

**நகம் வெட்டுதல்**

அவ்வப்போது நகம் வெட்ட வேண்டும் என்றும் இஸ்லாம் பணிக்கின்றது. காரணம் நகம் நீண்டிருந்தால் அதன் இடைவெளியில் அழுக்குகள் சேரும். உணவு சாப்பிடும் வேளையில் நக அசுத்தத்தையும் சேர்த்து உண்ண வேண்டி வரும். இதுவும் நோயை ஏற்படுத்தும் என்பதால் நகம் வெட்டுதல் அவசியம்.

● நபி (ஸல்) அவர்கள் கூறியதாவது: "இயற்கை மரபுகள் ஐந்தாகும்" அல்லது "ஐந்து செயல்கள் இயற்கை மரபுகளில் (இறைத் தூதர்கள் வழியில்) அடங்கும்". (அவையாவன:) விருத்த சேதனம் செய்வது, மர்ம உறுப்பின் முடியைக் களை(ந்திடச் சவரக் கத்தியைப் பயன்படுத்து)வது, நகங்களை வெட்டிக்கொள்வது, அக்குள் முடிகளை அகற்றுவது, மீசையைக் கத்தரித்துக் கொள்வது.

அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலி) புகாரி 429

# சுற்றுப்புற சூழலை மாசுபடுத்துவோருக்கு எச்சரிக்கை!

கீழ்கண்ட எச்சரிக்கைகள் இவ்வுலகின் உரிமையாளனிடம் இருந்து வந்தவை. எனவே இவற்றைப் பேணாவிட்டால் காவல்துறையிடம் இருந்தோ மற்ற மனிதர்களிடம் இருந்தோ தப்பித்து விடலாம். ஆனால் இன்றில்லாவிடினும் மறுமையில் இறைவனின் தண்டனை உறுதியாகக் கிடைக்கும்.

**சிறுநீர் கழித்தால் தூய்மை**

பொதுவாக மலம் கழித்து விட்டால் அனைவரும் கழுவி விடுவோம். ஆனால் சிறுநீர் கழித்தால் அதைப் பெரும்பாலானோர் தூய்மை செய்வதில்லை. அதை ஒரு அசுத்தமாகக் கணக்கிடுவதே இல்லை. ஆங்காங்கே சாலையோரங்களில் சிறுநீர் கழிப்பவர்கள் கழித்து விட்டுச் சுத்தம் செய்யாமல் இருந்து விடுகிறார்கள். இப்படி செய்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

● இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு தோட்டத்தைக் கடந்து சென்றார்கள். அப்போது அவர்கள், 'இந்த சமாதிகளில் அடங்கியுள்ளவர்கள் வேதனை செய்யப்படுகிறார்கள். பெரிய (குற்றம்) ஒன்றுக்காக இவர்கள் தண்டிக்கப்படவில்லை. மாறாக அவர்களில் ஒருவன் சிறுநீர் கழித்து விட்டுத் தூய்மை செய்யாதவனாக இருந்தான். மற்றொருவன் கோள் சொல்லித் திரிபவனாக இருந்தான்' என்று கூறினார்கள். அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்(ரலி) நூல்: நஸயீ 2041

மக்கள் கூடக் கூடிய இடங்களான இரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் ஆகிய இடங்களில் அசுத்தப்படுத்தி மக்களை ஏராளமானோர் துன்புறுத்துகிறார்கள். அவ்விடங்களுக்கருகில் நடந்து செல்வது மக்களுக்குப் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

இங்கு அசுத்தம் செய்யாதீர்கள் என்று அறிவிப்புப் பலகைகள் தொங்க விடப்பட்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் செத்தவன் காதில் சங்கு ஊதுவதைப் போன்று நடந்து கொள்கிறார்கள். இந்தத் தீய செயலை இறைவனின் இறுதித்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்டிக்கிறார்கள்.

● இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள், "சாபத்தைப் பெற்றுத் தரும் இரு காரியங்களை விட்டு விலகிக் கொள்ளுங்கள்" என்று கூறினார்கள். மக்கள், "சாபத்தைப் பெற்றுத் தரும் அந்த இரண்டு விஷயங்கள் என்ன?" என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், "மக்கள் (செல்லும்) பாதையில் இயற்கைத் தேவையை நிறைவேற்றுதல். அல்லது அவர்கள் நிழலாரக் கூடிய இடத்தில் இயற்கைத் தேவையை நிறைவேற்றுதல்" என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்லிம் 448

அதே நேரத்தில் இக்கொடிய செயலில் ஈடுபடாமல் பாதையில் கிடக்கின்ற அசுத்தங்களை அகற்றினால் இது இறைநம்பிக்கையின் ஒரு பகுதியாக ஆகி விடுகின்றது. அதனால் இறைவனிடம் கூலியும் கிடைக்கிறது.

# சுற்றுபுறத் தூய்மையும் நம் கடமையே!

**மரம் நடுவோம்**

● நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: ஒரு இறைநம்பிக்கையாளர் விவசாயம் செய்கிறார் அல்லது மரசெடிகளை நடுகிறார் அதிலிருந்து பறவைகள், மனிதர்கள் அல்லது பிராணிகள் ஏதாவது சாப்பிட்டால் அந்த மனிதருடைய கணக்கில் அது ஒரு அறச்செயலாக கணக்கிடப்படுகிறது.
*அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக்(ரலி) நூல்: புகாரி,முஸ்லிம்*

**தூய்மை இறைநம்பிக்கையின் அளவுகோல்**

●நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: தூய்மை இறை நம்பிக்கையின் ஒரு பகுதியாகும்.
*அறிவிப்பவர்:அபூ மாலிக் அல் அஷ்அரி(ரலி) நூல்:முஸ்லிம் (328)*

**தெருவை தூய்மையாக்கினாலும் பாவமன்னிப்பு**

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதர் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது பாதையில் முட்கிளையொன்றைக் கண்டு அதை எடுத்து (எறிந்து)விட்டார், அவரது இந்த நற்செயலை அல்லாஹ் அங்கீகரித்து அவருக்கு(அவர் செய்த பாவங்களிலிருந்து) மன்னிப்பு வழங்கினான்.*அறிவிப்பவர்: அபுஹுரைரா(ரலி) நூல்:புகாரி (654)*

**இறைநம்பிக்கையின் கிளைகளில் ஒன்று**

● “இறை நம்பிக்கை என்பது எழுபதுக்கும் அதிகமான கிளைகளை கொண்டதாகும். அவற்றில் உயர்ந்தது “இறைவனைத் தவிர வேறு வணக்கத்துக்கு உரியவன் இல்லை“ என்று கூறுவதாகும். அவற்றில் தாழ்ந்தது, தொல்லை தரும் பொருளைப் பாதையிலிருந்து அகற்றுவதாகும். வெட்கமும் இறை நம்பிக்கையின் ஒரு கிளையாகும்“ என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
*அறிவிப்பாளர்: அபூஹுரைரா (ரலி) நூல்: முஸ்¬லிம் 58*

**அசுத்தம் செய்யும் முன் யோசி!**

● நபி(ஸல்)அவர்கள்கூறினார்கள்: சாபத்தை வரவழைக்கும் இரண்டு இடங்களில் மலஜலம் கழிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நீர்க்கரைகளிலும், சாலை நிழல்தரும் இடங்களிலும் மலம் கழிக்காதீர்கள்.
*அறிவிப்பவர்: அபுஹுரைரா(ரலி) நூல்: முஸ்லிம் (397)*

● நபி(ஸல்)அவர்கள்கூறினார்கள்:“ஓடாது தேங்கிக்கிடக்கும் நீரிலும், நீங்கள் குளிக்கும் நீரிலும் உங்களில் எவரும் சிறுநீர் கழிக்கவேண்டாம்.“
*அறிவிப்பவர்: அபுஹுரைரா(ரலி)நூல்: முஸ்லிம் (424)*

நம்மையும் நமது சுற்றத்தையும் தூய்மையாக வைத்து இறைவனின் நேசத்தைப் பெறும் பாக்கியத்தை நம் அனைவருக்கும் அவன் வழங்குவானாக!

**2:222. “...**பாவங்களைவிட்டு மீள்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான். இன்னும் தூய்மையாக இருப்போரையும் நேசிக்கின்றான்.**”**

# தொழுகைக்கு முன் தூய்மை

தொழுகைக்கு முன்னால் குறிப்பிட்ட சில உறுப்புகளை கழுவித் தூய்மைப் படுத்துவது உளூ எனப்படும். உளூவைப்பற்றி திருமறை திருக்குர்ஆன் கூறுவதைப் பார்ப்போம்.


நம்பிக்கைகொண்டோரே! நீங்கள் தொழுகைக்காகத் தயாராகும்போது (முன்னதாக) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் (இரு) கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். உங்களுடைய தலைகளை (ஈரக்கையால்) தடவி கொள்ளுங்கள். உங்கள் கால்களை இரு கணுக்கால் வரை(க் கழுவிக் கொள்ளுங்கள்). (அல்-குர்ஆன் 5 : 6)

உளூ செய்யும் முன் நம் உடல் மற்றும் உடை மலம், மூத்திரம், இரத்தம் போன்ற அசுத்தங்களில் இருந்து சுத்தம் செய்யப் பட்டிருக்க வேண்டும். நம் உடல் உடலுறவு, ஸ்கலிதம், மாதவிடாய் போன்றவற்றின் மூலம் அசுத்தமாகியிருந்தால் குளிப்பை நிறைவேற்றாமலும் தொழுகைக்கு முற்படக்கூடாது.


அருள்மறை அல்-குர்ஆனுக்கு விளக்கமாக வாழ்ந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உளூ குறித்து விரிவாகக் கூறிய செய்திகளின் சுருக்கத்தை கீழே காண்போம்.

**உளூ செய்யும் முறை :**


1. உளூ செய்வதாக (நிய்யத்) மனதில் எண்ணிக் கொண்டு பிஸ்மில்லாஹ் (அல்லாஹ்வின் திருநாமம் கொண்டு இதனைத் தொடங்குகிறேன்) எனக் கூறவேண்டும்.



2. இரு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவ வேண்டும்.




3. மூன்று முறை வாய் கொப்பளித்து மூக்கையும் சுத்தம் செய்துகொள்ள வேண்டும்.



4. முகத்தை மூன்று முறை கழுவ வேண்டும். (அளவு: ஒரு காதிலிருந்து மறு காது வரையும் நெற்றியின் துவக்கம் முதல் கீழ் தாடை வரையும்)



5. இரு கைகளையும் விரல் நுனி முதல் முழங்கை உட்பட மூன்று முறை கழுவ வேண்டும். முதலில் வலது கையையும் பின்னர் இடது கையையும் கழுவ வேண்டும்.





6. தலை முழுவதையும் ஈரக்கைகளால் தடவ வேண்டும். (இரு கைகளையும் தலையின் முற்பகுதியிலிருந்து பிற்பகுதிவரை கொண்டு சென்று மீண்டும் அதே கையை ஈரத்துடன் முற்பகுதி வரை கொண்டு செல்ல வேண்டும். பிறகு ஆட்காட்டி விரலை காதின் உட்பகுதியையும் பெரு விரலால் காதின் வெளிப்பகுதியையும் ஒரு தடவை தடவ வேண்டும்.



7. இரு கால்களையும் விரல் நுனியிலிருந்து கணுக்கால் வரையிலும் மூன்று முறை கழுவ வேண்டும். ( முதலில் வலது காலையும் பின்னர் இடது காலையும் கழுவ வேணடும்)

8. இவையனைத்தையும் வரிசைப்படி செய்ய வேண்டும்.
9. மேற்கூறியபடி யார் உளூவை அழகிய முறையில் செய்து விட்டு அதன் பிறகு.
'அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹூ வஹ்தஹூ லாஷரீக்கலஹூ வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ'

பொருள் : வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர வேறு எவருமில்லை.அவன் தனித்தவன். இணையில்லாதவன். மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவனது (இறுதித்) தூதருமாவார்கள் என சாட்சி கூறுகிறேன்.
என்று கூறினால் அவருக்காக எட்டு சுவன வாசல்களும் திறக்கப்படும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : உமர் (ரலி) நூல்: திர்மிதி)

# தூய்மைக்கான விதிமுறைகள்

நமது வாழ்வின் அனைத்து அம்சங்களுக்கும் விதிமுறைகளையும், வரையறைகளையும் வகுத்துத் தந்துள்ள இஸ்லாம், நாம் பயன்படுத்தும் நீர், பொருட்கள்,பாத்திரங்கள் எவ்வாறிருக்க வேண்டும் என்பதற்கும் சில விதிமுறைகளை வகுத்துள்ளது.

## தண்ணீரின் வகைகள்

அவை இரு வகைப்படும்:
1. சுத்தமான தண்ணீர். (மாவுன் தாஹிர்)
2. அசுத்தமான தண்ணீர்(மாவுன் நஜஸுன்)

## முதல்வகை : சுத்தமான தண்ணீர்

இறைவனால் அருளப்பட்ட இயற்கை நிலையிலுள்ள தண்ணீர். இவை இரண்டு வகைகளாகும்.
1. தானும் சுத்தமாக இருந்து பிற பொருளையும் சுத்தமாக்கும். (தஹூர்) உதாரணம் : கிணற்று நீர், ஓடை நீர், ஆற்று நீர், கடல் நீர், மழை நீர். பனி நீர் போன்றவை.
2. தான் சுத்தமாக இருந்து பிறபொருளை சுத்தம் செய்யாது. (தாஹிர்) உதாரணம் : இளநீர். தேநீர், பதநீர், பன்னீர், பால், மோர், பழரசம் போன்றவை.

## இரண்டாவது வகை : அசுத்தமான தண்ணீர்

இது கழிவு நீர், உபயோகித்த நீர், அசுத்தம் கலந்த நீர் ஆகும். அசுத்தமான (நஜீஸ்) பொருள் விழுந்து தண்ணீரின் நிறம், சுவை, மணம் மாறினால் சிறிய அளவாயினும் பெருவெள்ளமாயினும் அது அசுத்தமான தண்ணீர் என்றே கருதப்படும்.

## தடுக்கப்பட்டவை (ஹராமானவை)

1. இந்த அசுத்தமான தண்ணீரை உண்பதும் குடிப்பதும் எவ்வாறு ஹராம் - தடை செய்யப்பட்டுள்ளதோ அவ்வாறே அதைக் கொண்டு சுத்தம் செய்வதும் பயன்படுத்துவதும் ஹராம் - தடைசெய்யப்பட்டுள்ளது. வேறு வழியே இல்லாது நிர்பந்த நிலைகள்,ஆபத்தான சூழல்கள் ஏற்படுமாயின் கடைசி கட்டத்தில் பயன்படுத்த மார்க்கம் அனுமதிக்கிறது. இது ஆபத்தான நிலைகளில் மார்க்கம் வழங்கும் பொது விதியாகும்.

2. தரையிலோ, உடலிலோ, உடையிலோ, பயன்படுத்தும் பாத்திரத்திலோ அசுத்தம் (மலம், மூத்திரம், இரத்தம் போன்றவை ) விழுந்து விட்டால் அது நீங்கும் வரை சுத்தம் செய்யவேண்டும். அவ்வாறு கழுவிய பிறகும் நிறமாற்றம் தெரியுமாயின் தவறில்லை. அதைப் பயன் படுத்தலாம்.

சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் காணலாம்:- ஒரு கிராமவாசி பள்ளிவாசலில் சிறுநீர் கழித்துவிட்டார். அவரைப் பிடித்து விரட்ட மக்கள் ஓடினர். அதைக்கண்ட நபிகளார் 'அவரை அப்படியே விட்டுவிடுங்கள். அவர் சிறுநீர் கழ்த்த இடத்தில் ஒருவாளித் தண்ணீரை ஊற்றிவிடுங்கள். நீங்கள் எளிமையை கையாளவும் கடினமுறையை விடவும் போதிப்பதற்கு வந்தவர்கள்.' (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

3. நாம் பயன்புடுத்தும் பாத்திரத்தில் நாயின் எச்சில் பட்டுவிட்டால் அதை ஏழு முறை கழுவ வேண்டும். முதலாவதாக மண்ணைக் கொண்டு தேய்த்து சுத்தம் செய்ய வேண்டும்.

## பாத்திரங்களும் தூய்மையும்

● நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:-

ஒரு பாத்திரத்தில் நாய் நக்கிவிட்டால் அதை ஏழு முறை கழுவுங்கள். முதலாவது முறை மண்ணைக் கொண்டு தேயுங்கள். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

மனிதன் உண்பதற்கும், குடிப்பதற்கும் பயன்படுத்தும் பாத்திரங்கள் மிகவும் இன்றியமையாததாகும்.. அவை தொன்று தொட்டு இன்றைய நாகரிக காலம் வரை காலத்திற்கும் வசதிக்கும் ஏற்ப இரும்பு, செம்பு, பித்தளை, பலகை, தோல்,மண்பாண்டம், பிளாஸ்டிக், அலுமினியம், சில்வர், வெள்ளி,தங்கம் போன்ற பாத்திரங்களை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் நமது மார்க்கம் இவற்றுள் சிலவற்றைப் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது. அவை யாவை ?

1. தங்கம், வெள்ளிப் பாத்திரங்கள். தங்கம், வெள்ளிப் பாத்திரங்கள், அவற்றால் முலாம் பூசப்பட்ட அல்லது ஒட்டு போடப்பட்ட பாத்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதும் புழங்குவதும் கூடாது.

● நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்:- நீங்கள் தங்கம், வெள்ளிப் பாத்திரங்களில் குடிக்கவும் வேண்டாம். உண்ணவும் வேண்டாம். அவை நிராகரிப்போருக்கு இவ்வுலகிலும், (நம்பிக்கை கொண்ட) உங்களுக்கு மறுவுலகிலும் உள்ளவையாகும். (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்)

பாத்திரங்கள் என்பது பயன்படுத்துதற்கே தவிர பெருமைக்கோ அலங்காரத்திற்கோ அல்ல. இவ்வித ஆடம்பர அலங்காரப் பொருட்களைக் காணும் ஏழை எளியவர்கள் மனத்தளவில் பாதிக்கவும் சஞ்சலப்படவும் செய்யவார்கள்.

# தந்தையரே உஷார்!

எவருக்கேனும் பிள்ளை பிறந்தால், அப்பிள்ளைக்கு நல்ல பெயர் வைக்கவும், நல்ல ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுக்கவும், வாலிப வயதை அடைந்து விட்டால் மணமுடித்து வைக்கவும். பருவமடைந்த பின்னரும்(தனது அலட்சியப் போக்கின் காரணமாக) மகனுக்கு மணமுடித்து வைக்கவில்லையென்றால், அவன் பாவத்தில் வீழ்ந்துவிட்டால் அந்த பாவம் அவனுடைய தந்தையைச் சேரும். - நபிமொழி

(பைஹகி-401)

# கழிப்பறை ஒழுங்குகளும் கற்றுத் தந்தார் எங்கள் நபி!

இஸ்லாம் என்ற வார்த்தையின் பொருள் கட்டுப்பாடு, கீழ்படிதல், அல்லது ஒழுங்கு (discipline) என்பதும் அமைதி என்பதுமாகும். அதாவது இறைவனின் வழிகாட்டுதல்படி வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் அமைதிக்குப் பெயரே இஸ்லாம் எனலாம். இந்த ஒழுங்கை தன் வாழ்க்கை முன்மாதிரி மூலம் நமக்குக் கற்றுக் கொடுத்த நபிகள் நாயகம் (ஸல்) மனித வாழ்க்கையின் எந்த ஒரு பாகத்தையும் விட்டுச் செல்லவில்லை. கருவறையில் இருந்து கல்லறை வரை மனிதன் சந்திக்கக்கூடிய அனைத்துத்துறைகளிலும் திருக்குர்ஆனும் நபிவழியும் வழிகாட்டுகின்றன.

● "மலஜலம் கழிக்கும் முறை உட்பட உங்களின் நபி உங்களுக்கு கற்றுக்கொடுத்து விட்டார்களா?" என நபித்தோழர் ஸல்மான் (ரலி) அவர்களிடத்தில் யூத மதத்தை சேர்ந்த ஒருவர் கேட்டபோது "ஆம், மலஜலம் கழிக்கும் போது கிப்லாவை நாங்கள் முன்னோக்கக் கூடாதென்றும், வலது கையினால் சுத்தம் செய்யக்கூடாதென்றும், மூன்று கற்களுக்கு குறைந்த கற்களைக்கொண்டு சுத்தம் செய்யக்கூடாதென்றும், இன்னும் எலும்பு (மிருகங்களின்) விட்டைகளைக் கொண்டு சுத்தம் செய்யக்கூடாதென்றும் எங்கள் நபி எங்களைத் தடை செய்தார்கள்" என ஸல்மான்(ரலி) அவர்கள் விடையளித்தார்கள். (ஆதாரம்~முஸ்லிம்)

பாருங்கள்! மலஜலம் கழிக்கும் முறையைக்கூட கற்றுத் தந்திருக்கின்றார்கள் நபிகளார்! அந்த நபியவர்களின் வழிமுறையைப் பின்பற்றி நடக்கும்போது மலஜலம் கழிப்பது கூட நற்கூலிக்கான ஒன்றாக கருதப்படும்.

## கழிப்பறை ஒழுங்குகள்:

● கிப்லாவை (கஅபா ஆலயம் உள்ள திசையை) முன்னோக்கியோ பின்னோக்கியோ மலஜலம் கழிக்கக்கூடாது

(திறந்தவெளியில்) நீங்கள் மலஜலம் கழிக்கும் போது கிப்லாவை முன்னோக்கவும் வேண்டாம், பின்னோக்கவும் வேண்டாம் என நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். (ஆதாரம் ~ நஸயி)

(குறிப்பு: கட்டிடத்திற்குள் கிப்லாவை முன்னோக்கி, பின்னோக்கி மலஜலம் கழிப்பதில் தவறில்லை.)

● கழிவறைக்குள் நுழையும் போது இடது காலை முன் வைத்து பின் வரும் துஆவை ஓத வேண்டும்

அல்லாஹும்ம இன்னி அஊது பி(க்)க மினல் குபுஸி வல் கபாயிஸி

(பொருள்:- இறைவா! ஆண் பெண் ஷைத்தான்களின் தீங்குகளை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்.)

● கட்டடமில்லாத வெளி இடங்களில் மலஜலம் கழிக்கும் போது மற்றவர்கள் பார்க்காத அளவுக்கு தூரமாகிக் கொள்ள வேண்டும்.

~ நபி (ஸல்) அவர்கள் மலம் கழிக்கச் சென்றால் மற்ற யாரும் அவர்களை பார்க்காத அளவுக்கு (தூரமாக) செல்வார்கள். (ஆதாரம் ~ அபூதாவூத்)

~ நபியவர்கள் மலஜலம் கழிக்க விரும்பினால் பூமியை (அவ்விடத்தை) நெருங்கும் வரைக்கும் தன் ஆடையை உயர்த்தமாட்டார்கள். (ஆதாரம் ~ திர்மிதி, அபூதாவூத்)

● வலது கரத்தால் சுத்தம் செய்யக்கூடாது

~ உங்களில் ஒருவர் மலஜலம் கழிக்க நுழைந்தால் தன் ஆண் உறுப்பை தன் வலது கையினால் தொடக்கூடாது என நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். (ஆதாரம் ~ அபூதாவூத், நஸாயி)

● உட்கார்ந்து கொண்டு மலஜலம் கழிக்க வேண்டும் (நிர்ப்பந்தமான சூழ்நிலைகளில் தவிர)

~ நபி(ஸல்) அவர்கள் நின்று கொண்டு சிறுநீர் கழித்ததாக யாராவது உங்களுக்கு கூறினால் அதை நீங்கள் நம்ப வேண்டாம், நபியவர்கள் உட்கார்ந்து கொண்டுதான் சிறுநீர் கழித்திருக்கிறார்கள் என ஆயிஷா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஆதாரம் ~ நஸாயி)

● நிர்ப்பந்தமான சூழ்நிலைகளில் நின்று கொண்டு சிறுநீர் கழிக்கலாம்.

~ நபி(ஸல்) அவர்கள் ஒரு கூட்டத்தாரின் குப்பை மேட்டுக்கு வந்து அதன் மீது நின்று கொண்டு சிறுநீர் கழித்தார்கள். (ஆதாரம் ~ திர்மிதி, அபூதாவூத்)

● குளிப்பறையில் சிறுநீர் கழிக்கக்கூடாது.

~ குளிக்கக்கூடிய குளிப்பறையில் உங்களில் ஒருவர் சிறுநீர் கழிக்கக்கூடாது என நபி(ஸல்) அவர்கள் தடை செய்தார்கள். (ஆதாரம் ~ அபூதாவூத்)

~ உளு செய்யக்கூடிய குளிப்பறையில் உங்களில் ஒருவர் சிறுநீர் கழிக்கக்கூடாது, காரணம் அதன் மூலமாகத்தான் அதிகமான வஸ்வாஸ் (சந்தேகங்கள்) ஏற்படுகின்றன என நபி(ஸல்) கூறினார்கள். (ஆதாரம் ~ அஹ்மத்)

● மலஜலம் கழித்த பின் கையை சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

~ நபி(ஸல்) அவர்கள் மலஜலம் கழித்து (சுத்தம் செய்த) பின் மண்ணில் தன் கையை தேய்த்து (சுத்தம் செய்தார்கள்) (ஆதாரம் ~ நஸாயி)

● சிறுநீர் கழிக்கும் போது ஸலாம் சொல்லப்பட்டால் அதற்கு விடையளிக்கக்கூடாது

~ நபி(ஸல்) அவர்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருக்கும் போது அவர்களுக்கு பக்கத்தில் சென்று கொண்டிருந்த ஒரு மனிதர் நபியவர்களுக்கு ஸலாம் கூறினார், அதற்கு நபியவர்கள் விடையளிக்கவில்லை. (ஆதாரம் ~ நஸாயி)

● கழிப்பறையிலிருந்து வெளியாகும் போது வலது காலை முன்வைத்து பின் வரும் துஆவை ஓத வேண்டும்:

கு∴ப்ரான(க்)க (பொருள்:~ உன்னிடம் பாவ மன்னிப்புத் தேடுகிறேன்) (ஆதாரம் ~ திர்மிதி)

---

**மாற்றுமத அன்பர்களுக்கு...**

**திருக்குர்ஆன் தமிழாக்கம் அன்பளிப்புப் பிரதி பெற தொடர்பு கொள்ளுங்கள்:**

*ஓசூர்: 9994713191 தர்மபுரி: 9842627171 கோவை: 9003555755 திருப்பூர் : 9150068919 குன்னூர்: 9843622246 திருச்சி: 9865446344 மதுரை: 9789341714 சென்னை: 9944656942/9894442844 சேலம்: 9994091364 கும்பகோணம்: -9597285160 விழுப்புரம்: 9790290002 திருநெல்வேலி: 9786230030 மயிலாடுதுறை: 9942941190 தென்காசி: 9443695979 வேலூர்: 9944656942 திருவண்ணாமலை: 9994453346 உடுமலை: 9865051914 பழனி: 9791929377 ஊட்டி: 9543963412 தூத்துக்குடி: 8148059038 இளையான்குடி: 9842081210 ஈரோடு: 7373947869 /9942958888* **KGF:** *9845217262*

# ஈடில்லா கருணையாளனே இறைவன்

இன்று நம்மோடு உறவாடிக்கொண்டிருக்கும் மனிதர்களில் யார் நம்மோடு அன்பு மிக்கவர்கள் என்று கேட்டால் நாம் யாருமே தமது தாயார்தான் என்றுதான் கூறுவோம்.

தொடர்ந்து, "அந்தத் தாயைப் படைத்தது யார்? தாய் உள்ளத்தில் என்றும் வற்றாத தாய்ப் பாசம் என்பதை விதைத்தவன் யார்? தாயின் மாரில் நமக்காக தாய்ப் பாலை சுரக்கச் செய்தவன் யார்?" என்று கேட்டுப்பாருங்கள். ... இந்தக் கேள்விகளுக்கு விடைதேடும்போதுதான் இறைவன் என்பவன் எத்துணைக் கருனைமிக்கவன் என்பதை உணர்கிறோம். இவை அனைத்தும் நம்மீது கொண்ட அன்பின் காரணமாகவே என்பதை நாம் உணரும்போது அவனை நேசிக்காமல் இருக்க முடியுமா?

● இறைவனின் இறுதித் தூதர் நபிகள் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இறைவன் தன் கருணையை நூறு பாகங்களாகப் பிரித்தான். அதில் ஒரு பாகத்தை மட்டுமே இந்த பூமியில் விதைத்து உள்ளான். அதன் காரணமாகவே ஒரு தாய் தன் மகவை நேசிக்கிறாள், ஒரு தாய்ப் பறவை தன் குஞ்சை நேசிக்கிறது, எந்த அளவுக்கேன்றால் தன் கால் பட்டுவிடக்கூடாது என்பதற்காக தன் காலையும் உயர்த்திக் கொள்கிறது'

அப்படியென்றால் அந்த இறைவனின் கருணையை நினைத்துப் பாருங்கள். இதன் காரணமாகவே அவனை அளவற்ற அருளாளன் (அர்ரஹ்மான்) என்றும் நிகரற்ற அன்புடையவன்(அர்ரஹீம்) என்றும் கூறுகிறோம். அதாவது இவ்வுலகில் அனைவருக்கும் பொதுவாக அருள்புரிபவனும் அவனது கட்டளைகளுக்கு அடிபணிந்து வாழ்ந்தவர்களுக்கு மாத்திரம் மறுமையில் அருள்புரிபவனும் என்பது இதன் பொருள்.

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன். நியாயத் தீர்ப்புநாளின் அதிபதி (திருக்குர்ஆன் 1: 3, 4)

## நீதியை நிலைநாட்டுபவன்

அந்தக் கருணையுள்ள இறைவனே நம் அனைவருக்கும் நீதிசெய்பவனும் நீதியை நிலைநாட்டுபவனும் ஆவான். நீதியை நிலைநாட்டும் பொருட்டு அநீதி செய்வோரை தண்டிப்பதும் அவன் கடமையாகிறது. அநீதியைக் காணும்போது கோபம் எழுவது இயல்பானது. இந்த தற்காலிக வாழ்வை ஒரு பரீட்சையாகவும் இவ்வுலகத்தை அதற்கான பரீட்சைக் கூடமாகவும் படைத்துள்ள இறைவன் அநியாயம் செய்வோரை தன் கருணையின் காரணமாக உடனேயே தண்டிப்பதில்லை. அவர்கள் திருந்த அவகாசம் கொடுக்கிறான். இதையே தனது இறுதி வேதத்தில் இவ்வாறு கூறுகிறான்.

18:58. (நபியே!) உம் இறைவன் மிகப்பிழை பொறுப்பவனாகவும், மிக்க கிருபையுடையவனாகவும் இருக்கின்றான் அவர்கள் சம்பாதித்த (தீவினைகளைக்) கொண்டு, (உடனுக்குடன்) அவர்களைப் பிடிப்பதாக இருந்தால், நிச்சயமாக அவர்களுக்கு வேதனையை தீவிரமாக்கியிருப்பான் ஆனால் அவர்களுக்கு ஒரு (குறிப்பிட்ட) தவணை உண்டு அப்போது அவனையன்றி புகலிடத்தைக் காணவே மாட்டார்கள்.

## கோபத்தை மிகைக்கும் கருணை

● இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“அல்லாஹ் படைப்புகளை படைத்தபோது (தன்னுடைய) அரியாசனத்தின் மீது வைக்கப்பட்டிருந்த தன்னுடைய பதிவேட்டில், “என் கருணை என் கோபத்தை வென்றுவிட்டது“ என்று (கருணையைத்) தனக்குத்தானே விதியாக்கிக் கொள்ளும் வகையில் எழுதினான்” இதை அபூஹுரைரா(ரலி) அறிவித்தார்.(புகாரி 2223)

### அடியார்களை நெருங்கக் காத்திருப்பவன்

இறைவன் தன்னைப்பற்றி இவ்வாறு கூறியதாக நபிகளார் கூறினார்கள்:

“என் அடியான் என்னைப் பற்றி என்ன நினைக்கிறானோ அதற்கேற்ப அவனிடம் நான் நடந்துகொள்வேன். அவன் என்னை நினைவு கூரும்போது நான் அவனுடன் இருப்பேன். அவன் என்னைத் தன் உள்ளத்தில் நினைவுகூர்ந்தால் நானும் அவனை என் உள்ளத்தில் நினைவுகூருவேன். அவன் ஓர் அவையோர் மத்தியில் என்னை நினைவு கூர்ந்தால் அவர்களைவிடச் சிறந்த ஓர் அவையினரிடம் அவனை நான் நினைவு கூருவேன். அவன் ஒரு சாண் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் ஒரு முழுமளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் ஒரு முழம் அளவுக்கு என்னை நெருங்கினால் நான் (வலதும் இடதுமாக விரித்த) இரண்டு கைகளின் நீள அளவுக்கு அவனை நெருங்குவேன். அவன் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவனை நோக்கி ஓடிச் செல்வேன்”

இதை அபூஹுரைரா(ரலி) அறிவித்தார் (புகாரி 2224) .

## பாவங்களை அளவுக்கு மீறி மன்னிப்பவன்

ஓர் அடியார் ஒருபாவம் செய்துவிட்டார். பிறகு “இறைவா! நான் ஒரு பாவம் செய்து விட்டேன். எனவே, என்னை மன்னித்து விடுவாயாக“ என்று பிரார்த்தித்தார். உடனே அவரின் இறைவன். “என் அடியான் எனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை மன்னிப்பான் (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (நன்று) நான் என் அடியானை மன்னித்துவிட்டேன்“ என்று சொன்னான். பிறகு அந்த அடியார் (சிறிது காலம்) அல்லாஹ் நாடியவரை அப்படியே இருந்தார். பிறகு மீண்டும் ஒரு பாவத்தைச் செய்தார். அப்போது அந்த மனிதர் (மீண்டும்) “என் இறைவா! நான் மற்றொரு பாவம் செய்து விட்டேன். எனவே, என்னை மன்னித்து விடுவாயாக“ என்று பிரார்த்தித்தார். உடனே இறைவன் (இம் முறையும்) “என் அடியான் தனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை மன்னிப்பான் (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (நல்லது.) நான் என் அடியானை மன்னித்துவிட்டேன்““ என்று சொன்னான். பிறகு அல்லாஹ் நாடியவரை அந்த மனிதர் அப்படியே (சிறிது காலம்) இருந்தார். பிறகும் (மற்றொரு) பாவம் செய்தார். (இப்போதும் முன்பு போன்றே) “என் இறைவா! நான் இன்னொரு பாவம் செய்து விட்டேன். எனக்காக அதை மன்னித்து விடுவாயாக“ என்று பிரார்த்தித்தார். அதற்கு அல்லாஹ் “என் அடியான் தனக்கோர் இறைவன் இருக்கிறான் என்றும், அவன் பாவங்களை மன்னிப்பான் (அல்லது) அதற்காகத் தண்டிப்பான் என்றும் அறிந்துள்ளானா? (அப்படியானால்) நான் என் அடியானை மூன்று முறையும் மன்னித்து விட்டேன். இனி அவன் நாடியதைச் செய்து கொள்ளட்டும்“ என்று சொன்னான் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா (ரலி) அறிவித்தார்.(புகாரி 2226)

# நோயுறும் உள்ளங்களும் இறைவனின் சிகிச்சையும்

வாழ்க்கை என்ற பரீட்சையில் ஷைத்தானின் தாக்கம் காரணமாக உள்ளங்கள் நோய்க்கு ஆளாகின்றன. உள்ளத்தில் நோய் உண்டாகுவதை பின்வரும் இறைவசனம் உறுதி செய்கிறது:

அவர்களுடைய இதயங்களில் நோயுள்ளது.... (திருக்குர்ஆன் 2:10)
உள்ளத்து நோயின் வீரியத்தைப் பொருத்து மனிதனின் உடலும் செயல்பாடுகளும் அமைவதாக நபிகளார் கூறுகிறார்கள்:

- 'அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக உடலில் ஒரு சதைத் துண்டு உள்ளது. அது சீர்பெற்று விட்டால், உடல் முழுவதும் சீர்பெற்று விடும். அது கெட்டு விட்டால் உடல் முழுவதும் கெட்டு விடும். அதுதான் உள்ளம்' (புகாரி, முஸ்லிம்)

## திருக்குர்ஆன் என்ற அருமருந்து

இந்த நோயிலிருந்து மனிதர்களைக் காப்பாற்ற இறைவன் தன் தூதர் மூலமாக அருளிய அருமருந்தே திருக்குர்ஆன்.
"இது (திருக்குர்ஆன்) நம்பிக்கை கொண்டோருக்கு நேர்வழியாகவும், நிவாரணியகவும் இருக்கும் என்று (நபியே!) நீர் கூறுவீராக" (திருக்குர்ஆன் 41:44)
மேலும் கூறுகின்றான்:
"மேலும் நம்பிக்கையாளர்களுக்கு நிவாரணியாகவும் அருளாகவும் உள்ளவற்றையே இக்குர்ஆனில் நாம் இறக்கியுள்ளோம். அது அநியாயக்காரர்களுக்கு நஷ்டத்தை தவிர வேறெதையும் அதிகரிக்காது" (திருக்குர்ஆன் 17:82)
"மனிதர்களே! உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்கு நல்லுபதேசமும் உள்ளங்களில் உள்ளவற்றிற்கு நிவாரணியாகவும் நம்பிக்கையாளர்களுக்கு நேர்வழியும், கருணையும் நிச்சயமாக வந்துவிடும்" (திருக்குர்ஆன் 10:57)
திருக்குர்ஆனையும் அதற்கு செயல்முறை விளக்கமாகவும் அமைந்த நபிகளாரின் வழிமுறையையும் பின்பற்றுவோர் பெருமளவில் இந்த நோயில் இருந்து காப்பாற்றப் படுகிறார்கள். அதன் காரணமாக இம்மையில் அமைதியும் மறுமையில் ஈடேற்றத்தையும் அடைய வழி பிறக்கிறது.

## ஐந்து கடமைகளும் நோய் நிவாரணமும்

அடிக்கடி நோயினால் பாதிக்கப்படும் உள்ளங்களை குணப்படுத்தும் வகையிலேயே ஐங்கால தொழுகைகள், ரமழான் மாத நோன்பு உட்பட அனைத்து இஸ்லாமிய கடமைகளும் அமைந்துள்ளன. அக்கடமைகளை முறையாக செயல்படுத்துவது முறையாக நேரத்திற்கு மாத்திரைகளை உட்கொள்வது போன்றாகும்.

## ஓரிறைக் கொள்கையை மனதார ஏற்றல்

நோய் நிவாரணத்திற்கான முதல்படி இறைநம்பிக்கையைத் தூய்மைப் படுத்துவதுதான். படைப்பினங்களை விடுத்து படைத்த இறைவனை மட்டுமே வணக்கத்துக்குரியவனாகவும் அவனது தூதரை நம் வாழ்க்கை

முன்மாதிரியாகவும் மனதார ஏற்று அதன் அடிப்படையில் வாழ முற்படுவதுதான் ஆரோக்கியமான உள்ளத்திற்கு அஸ்திவாரமாகும்.

● மனிதர்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனையே வணங்குங்கள். (அதனால்) நீங்கள் இறையச்சமும் தூய்மையும் உடையோராகலாம். (திருக்குர்ஆன் 2:21)

**ஐவேளைத் தொழுகை:**

ஓரிறைக் கொள்கையை ஏற்றுக்கொண்டு அதில் அவர் நிலைத்திருக்க வேண்டுமானால் ஷைத்தானின் தீங்குகளில் இருந்து பாதுகாப்பு பெற வேண்டும். அதற்கு சதா இறைவனின் தொடர்பும் நினைவும் வேண்டும். உடல்தூய்மை பேணி தொழுகையை வேளாவேளை நிறைவேற்றுவதன் இறை நினைவும் இறைவனுக்கு பதில் சொல்லவேண்டும் என்ற பொறுப்புணர்வும் உண்டாவதால் அது மனிதனை பாவங்களில் இருந்து விலக்கி வைக்கிறது.

● இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக. நிச்சயமாக தொழுகை (மனிதரை) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும். நிச்சயமாக, அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகவும் பெரிதா(ன சக்தியா)கும் அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகிறான். (திருக்குர்ஆன் 29:45)

(அல்லாஹ் என்றால் 'வணக்கத்திற்குத் தகுதிவாய்ந்த ஒரே இறைவன்' என்று பொருள்)

● 'உங்களில் ஒருவரின் வீட்டுக்கு முன்னால் ஒரு ஆறு பெருக்கெடுத்து ஓடுகின்றது, அவர் அதில் ஒரு நாளைக்கு ஐந்து தடவை குளிக்கின்றார் அவரது உடலில் அழுக்குகள் ஏதும் எஞ்சி இருக்குமா? என இறைத்தூதர் (ஸல்) தனது தோழர்களிடம் கேட்டபோது, அவர்கள் அப்படி எந்த அழுக்கும் அவரின் மீது எஞ்சியிருக்காது என பதிலளித்தனர். அப்போது இதே போன்று தான் ஐவேளை தொழுகையும் அதன் மூலம் இறைவன் பாவங்கள் அனைத்தையும் கழுவி விடுகிறான்' என கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

இதைப் பள்ளிவாசல்களில் கூட்டாக வரிசைகளில் அணிவகுத்து நிறைவேற்றும்போது சகோதரத்துவமும் சமத்துவமும் இயற்கையாகவே பேணும் பண்பு வந்துவிடுகிறது. மக்களை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பு அங்கு ஏற்படுவதால் சமூக உறவு வலுப்படுவதோடு சமூகத்தின் குறைகளையும் பிரச்சினைகளையும் தீர்க்கும் குழுக்கள் அல்லது கூட்டமைப்புகள் உருவாகின்றன.

**நோன்பு:** நோன்பின் மூலம் ஆன்மீகப் பரிசுத்தமும் சுயக் கட்டுப்பாடும் சமூகத்தின் தேவை உணரும் பண்பும் தியாக உணர்வும் உருவாகின்றன.

**ஜகாத் எனும் ஏழை வரி:** செல்வம் என்பது இறைவனுக்கு சொந்தமானது, அது தற்காலிகமாக தன்னிடம் தரப்பட்டுள்ளது என்ற உணர்வை தனிமனிதனிடம் உண்டாக்கி அதை ஏழைகளோடு பங்கிட்டு உண்ணச் செய்கிறது ஜகாத். செல்வத்தையும் செல்வத்தின் மூலம் உண்டாகும் தீய சிந்தைகளில் இருந்து உள்ளத்தையும் தூய்மைப் படுத்துகிறது ஜகாத்.

**ஹஜ்ஜ்:** அன்று பிறந்த பாலகன் போல் பாவங்களில் இருந்து பரிசுத்தமாக்குகிறது ஹஜ்ஜ் என்ற கடமை. ஒன்றே மனிதகுலம் ஒருவனே இறைவன் என்ற கொள்கை முழக்கத்தை நடைமுறை வடிவில் உலகறியச் செய்து உலகளாவிய சகோதரத்துவத்தை பறைசாற்றுகிறது ஹஜ்ஜ் என்ற கடமை!

# என் மண்ணறை எப்படி இருக்கும்?

மதினாவாசி ஒருவருடைய பிரேத ஊர்வலத்தை பின் தொடர்ந்து நபி(ஸல்) அவர்கள் சென்றார்கள். பிரேதம் அடக்கம் செய்யப்பட்டதும் நபியவர்கள் மண்ணறைக்கருகில் அமர்ந்தார்கள். நங்களும் அவரைச் சுற்றி அமர்ந்தோம். நபி(ஸல்) அவர்கள் சிறிய கம்பு ஒன்றினால் நிலத்தைக் கீறிக் கொண்டிருந்தார்கள். திடிரென தன் தலையை உயர்த்தி "மண்ணறை வேதனையை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடிக் கொள்ளுங்கள்" என்று மூன்று தடவைக் கூறினார்கள். பின்பு மரணத் தருவாயிலிலுள்ள ஒரு இறைநம்பிக்கையாளனுடைய நிலை பற்றி கூறினார்கள்:

'இறைநம்பிக்கையாளனான ஒரு அடியான் உலகத் தொடர்புகளை துண்டித்து விட்டு மறுமையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் போது சூரிய ஒளிக்கொப்பான பிரகாசமான முகத்துடன் வானிலிருந்து சில வானவர்கள் அவனிடம் வருவார்கள். அவர்கள் தங்களுடன் சுவர்க்கத்து துணிகளையும் சுவர்க்கத்து நறுமணத்தையும் வைத்துக் கொண்டு அவனுடைய பார்வைக்கு எட்டும் தூரத்தில் இருப்பார்கள். அப்போது உயிரைக் கைப்பற்றும் வானாவர் வந்து அவனருகில் அமருவார். அவனை நோக்கி நல்ல ஆத்மாவே! நீ இந்த உடலிலிருந்து வெளியேறி அல்லாஹ்வின் மன்னிப்பை நோக்கியும், அவனுடைய பொருத்தத்தை நோக்கியும் செல்" என்று கூறுவார். தோல் பையிலிருந்து நீர் வழிந்து விடுவது போன்று அந்த ஆத்மா வெளியேறி விடும். அவர் அதனை எடுத்துச் செல்வார்.

அதனை அவர் எடுத்ததும் அருகிலுள்ள வானவர்கள் உடனே சுவர்க்கத்து துணியிலும், நறுமணத்திலும் அதனை வைத்த விடுவார்கள். அதிலிருந்து கஸ்தூரி வாடை வீசும். ஆந்த வானவர்கள் அதனை சுமந்தவர்களாக முதலாவது வானத்தை நோக்கி சென்று வானத்தை திறந்து விடுமாறு அதிலுள்ள வானவர்களிடம் கூறுவார்கள்.

அவ்வானவர்கள் வானத்தை திறந்து அந்த ஆத்மாவை வரவேற்பார்கள் ஒவ்வொரு வானத்திலும் இவ்விதமே நடைபெறும். ஏழாவது வானத்தை கடந்து சென்றதும் அல்லாஹ் ஆத்மாவை சுமந்து சென்ற வானவர்களை நோக்கி எனது இந்த அடியானுடைய செயல்களை இல்லியியீனிலே பதிவு செய்து விட்டும் பூமியிலுள்ள அவனது உடலில் அவனுடைய ஆத்மாவை சேர்த்து விடுங்கள்!

## தீயவர்களின் உயிர் கைப்பற்றப்படும் வேளை

தீயவர்களின் உயிர் வாங்கப்படும்போதே அவர்களுக்கு வேதனை ஆரம்பமாகி விடுகிறது. இறைநிராகரிப்பாளர்களின் உயிர் வாங்கப்படும்போது அவர்களுக்குக் கொடுக்கப்படும் வேதனையைப் பற்றி பின்வரும் இறைவசனம் தெளிவுப்படுத்துகிறது.

'(ஏக இறைவனை) மறுப்போரின் முகங்களிலும், முதுகுகளிலும் வானவர்கள் அடித்து அவர்களைக் கைப் பற்றும் போது சுட்டெரிக்கும் வேதனையை அனுபவியுங்கள்! என்று கூறுவதை நீர்ப் பார்க்க வேண்டுமே!' (அல்குர்ஆன்: 8:50)

கெட்டவன் மரணித்தவுடன் அவனது உயிரை வானவர்கள் எடுத்துச் செல்லும்போதே அவனுடைய இழிவையும் அவமானத்தையும் அடையும் விதத்தில் வானவர்கள் அவனுக்கு மோசமான வரவேற்பு கொடுப்பார்கள்.

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: “இறைமறுப்பாளன் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்து மறுமையை நோக்கியவனாக இருக்கும் போது கறுப்பு முகங்களைக் கொண்ட வானவர்கள் வானத்திலிருந்து அவனிடம் வருவார்கள். (உயிரைக் கொண்டுச் செல்வதற்காக) அவர்களுடன் துணிகள் இருக்கும். அவனது பார்வை எட்டும் தூரத்தில் வானவர்கள் அமர்ந்திருப்பார்கள்.

பின்பு உயிரைக் கைப்பற்றும் வானவர் வந்து அவனுடைய தலைக்கு அருகில் அமருவார். “கெட்ட ஆன்மாவே! அல்லாஹ்வின் கோபத்துடனும் அதிருப்தியுடனும் நீ வெளியேறு!” என்று கூறுவார். அப்போது அவன் உடலிலிருந்து உயிர் பிரித்தெடுக்கப்படும். ஈரமான கம்பளியில் உள்ள ரோமத்தை பிடுங்குபவரைப் போல் வானவர் உயிரை வாங்குவார். உயிரை வாங்கிய பிறகு கண் சிமிட்டும் நேரம் கூட தன் கையில் வைத்திருக்காமல் உடனே அந்த துணிகளில் உயிரைச் சேர்த்து விடுவார்.

பூமியில் இறந்து அழுகிப்போன உடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தைப் போன்ற கெட்ட வாடை அதிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கும். இந்த (கெட்ட) உயிருடன் (வானில்) வானவர்கள் ஏறிச் செல்வார்கள். அந்த உயிருடன் வானவர் கூட்டத்தை அவர்கள் கடந்து செல்லும் போதெல்லாம் இந்த கெட்ட ஆன்மா யாருடையது? என்று வானவர்கள் கேட்காமல் இருக்க மாட்டார்கள். உலகில் அவன் அழைக்கப்பட்டுக் கொண்டிருந்த கெட்ட பெயரைக் கூறி இன்னாருடைய மகன் இன்னார் தான் என்று கூறுவார்கள்.

அவன் முதல் வானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அவனுக்காக கதவைத் திறக்குமாறு கேட்கப்படும். ஆனால் அவனுக்கு கதவு திறக்கப்படாது. அல்லாஹ்வின் தூதர்(ஸல்)அவர்கள் இந்த வசனத்தை ஓதிக் காட்டினார்கள். “நமது வசனங்களை பொய்யெனக் கருதி அதைப் புறக்கணிப்போருக்கு வானத்தின் வாசல்கள் திறக்கப்பட மாட்டாது. ஊசித்துவாரத்தில் ஒட்டகம் நுழையும் வரை அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். இவ்வாறே குற்றவாளிகளை தண்டிப்போம்.” (7: 40)

கடைசியில் பூமியில் உள்ள சிஜ்ஜீன் என்ற ஏட்டில் இவனது கணக்கை பதிவு செய்யுங்கள் என்று சங்கையும் மகத்துவமும் மிக்க அல்லாஹ் கூறுவான்.

(அறிவிப்பவர்: பரா இப்னு ஆஸிப் (ரலி) அஹ்மத்)

தனக்கு கிடைத்துள்ள கஷ்டமான வாழ்வை நினைத்து கெட்டவர் அலறி கொண்டிருப்பார். தனக்கு கிடைத்துள்ள இன்பமான வாழ்வை எதிர்பார்த்தவராக நல்லவர் காத்துக் கொண்டிருப்பார். மரணித்த உடனேயே தீயவர்களின் புலம்பலும் நல்லவர்களின் சந்தோஷமும் ஆரம்பித்து விடுகின்றது. இருவரில் யாராக இருக்க வேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுகிறீர்கள்? சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

Printed, published &edited by A.Mohamed Kasim on behalf of House of Peace, #8, 4th cross, 2nd main, LB Sastri nagar, Bangalore 560017 and printed at Print-O- Graph, Balaji complex, Sultanpet, Bangalore.
Registered News paper in India No. KARTAM/2007/28173

# ஏன் அவர் மதவெறியராக சித்தரிக்கப்படுகிறார்?

”உங்களுக்கு இடையில் ஒரு பெண் பத்து ஆண்களுடன் இணைந்து உறவு கொள்வதும் உங்களின் தாய், சகோதரிகளை இவ்விதம் நடப்பதற்கு சம்மதிப்பதும் பூர்வ ஆச்சாரமாக இருந்து வருகின்ற நிலையில், நீங்கள் அனைவரும் விபச்சாரத்தில் பிறந்தவர்களும் ஆண், பெண் உறவு விஷயத்தில் நிலத்தில் மேய்ந்து நடக்கும் கால்நடைகளை விட கீழான வெட்கமற்றவர்களுமாகின்றீர்கள். இவ்விதமுள்ள பாவகரமான துர் ஆச்சாரங்களை விட்டொழித்துச் சாதாரண மனிதர்களைப் போன்று வாழ்வதற்கு நாம் இதன் மூலம் உங்களுக்குக் கட்டளையிடுகின்றோம்”

நாகரீகம் வளர்வதற்கு முந்தைய கற்காலத்தில், மனிதன் கால்நடைகளைப் போன்று வாழ்ந்தான் என்பதை வரலாற்றுப் பாடங்களில் படித்துள்ளோம். அத்தகைய காலகட்டங்களில் அச்சமூகத்திற்குத் தலைமையேற்ற ஏதோ ஒரு நல்ல பண்பாட்டுப் பழக்கவழக்கங்களைக் கொண்ட மன்னன் மேற்கண்டக் கட்டளையை இட்டுள்ளான் என நினைத்தால்.... அது தவறு!

இது நாகரீகம் வளர்ந்து உச்சியை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்த 17 -18 ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் வாழ்ந்த ஒரு மன்னன் பிறப்பித்தக் கட்டளையாகும். 17 - 18 ஆம் நூற்றாண்டிலும் மக்கள் கால்நடைகளைப் போன்று காணும் ஆடவர், பெண்டிருடன் உறவு வைத்து நடந்தனர் என்பதை நம்பமுடியவில்லை தானே?... ஆனால் அதுதான் உண்மை!

சரி, யார் இந்த மன்னன்?. எங்கு, எதற்காக, எந்தத் தருணத்தில் இந்தக் கட்டளையை அந்த மன்னன் பிறப்பித்தான்? என்பதை அறிய ஆவலாக உள்ளதா?.

இவ்வாறு கட்டளையிட்டது, இந்தியாவைப் பலகூறாகப் பிரித்து ஆண்டு கொண்டிருந்த சேர, சோழ, பாண்டிய, பல்லவ, இராஜபுத்திர இன்னபிற மன்னர்களில் எவராவது ஒருவராக இருப்பார் எனக் கருதுவீர்களானால்....... அதுவும் தவறானதே.

இவ்வாறான அதிரடி உத்தரவைப் பிறப்பித்தவர் வேறு யாரும் அல்ல - இந்தியாவை அடக்கியாண்டுக் கொண்டிருந்தப் வெள்ளையர்களுக்குச் சிம்மச்சொப்பனமாகத் திகழ்ந்து வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க வீரத்துடன் வாழ்ந்த தீரர் திப்புசுல்தானேதான்!

திப்புவின் இந்தக் கட்டளைக்குக் காரணம் தான் என்ன?

திப்பு மலபாரில் கால் பதித்த வேளை ஒரு குறிப்பிட்ட உயர்குலத்தோர் தங்களைத் தெய்வத்தின் பிரதிநிதிகளாகவும் பூஜிக்கப்பட வேண்டியவர் களாகவும் கூறிக்கொண்டு தாழ்த்தப்பட்ட பெண்களையும் ஆண்களையும் அடக்கியாண்டு மோசம் செய்து கொண்டிருந்தனர். அவர்களின் வார்த்தைகளை மூடமாக நம்பியிருந்த ஒரு குறிப்பிட்ட தாழ்ந்தகுல குடும்பங்கள் தங்கள் பெண்களை அந்த குறிப்பிட்ட உயர்குல ஆடவரோடு சயனிக்க வைக்க மனப்பூர்வமாக விரும்பியிருந்தனர்.

ஒரு நாட்டின் தலைவனாக இருந்துகொண்டு இந்த நடைமுறையை சகிக்க முடியாமல் திப்பு பிறப்பித்த சீர்திருத்தக் கட்டளை காரணமாக பிற்காலத்தில் சார்பு ஊடகங்கள் அவரை மதவெறியராக சித்தரிக்கின்றன.

# வாசகர் எண்ணம்

● அப்துல்கலாம் அய்யா பற்றிய குறிப்புகளைப் படித்தபோது என் மீதும் என் தாயார் காட்டிய பாசத்தை நினைத்து அழுதுவிட்டேன். அவரை இழந்தபோது எனக்கு வயது 18. அவருக்கு எவ்வாறு கைம்மாறு செய்வேன்? நானும் மறுமை நாளில் அவரை சந்திப்பேன் என்று ஆதரவு வைக்கிறேன். இன்ஷாஅல்லாஹ்.

- **ஏ.சி. பிரபாகரன், அல்சூர், பெங்களூர்.**

● அப்துல் கலாம் அய்யா பற்றிய குறிப்புகள் அருமையாக இருந்தன. மனதைத்தொட்டன. மீண்டும் அவற்றை எதிர்பார்க்கிறேன்.

- **கிருக்ஷ்ணமூர்த்தி, மல்லேஸ்வரம், பெங்களூர்.**

● நற்செய்தி மலர்கள் அருமையாக வருகின்றன. அனைத்தையுமே படித்துவிடுகிறேன்.

- **டி. ஞானப்பிரகாசம், ஹெக்டே நகர், பெங்களூர்.**

● என் மகள் வெளியே செல்லும்போது பர்தா அணிந்து செல்ல உங்கள் இதழும் ஒரு காரணமே!

- **அப்துல்லா, பெங்களூர்.**

---

வாசகர்களின் கருத்துக்களுக்கு மிக்க நன்றிகள். இறைவன் நம் அனைவருக்கும் நற்கூலி வழங்குவானாக. இறைவனின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி வாழ்ந்து இம்மை மற்றும் மறுமை நற்பேறுகளை அடையும் நன்மக்களாக நம் அனைவரையும் ஆக்குவானாக.

- ஆசிரியர்

## திருக்குர்ஆன் நற்செய்தி மலர்

**வாசகர்கள் கவனத்திற்கு...**

● இவ்விதழைப் பெறவிரும்பும் அன்பர்கள் தங்களது தெளிவான விலாசத்தை 9886001357 என்ற எண்ணுக்கு SMS அனுப்பவேண்டும்.

● மாற்று மத அன்பர்களுக்கு இவ்விதழ் ஒரு வருடம் வரை அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்பினால் அவர்கள் SMS மூலம் RESEND QNM என்று டைப் செய்து அனுப்பவேண்டும். சந்தா அனுப்பத் தேவையில்லை.

● முஸ்லிம் அன்பர்களுக்கு 4 மாதம் வரை இவ்விதழ் இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தொடர்ந்து பெறவிரும்புவோர் சந்தா அனுப்பி புதுக்கிக் கொள்ள வேண்டும்.

● ஓராண்டு சந்தா : Rs. 60- ● ஈராண்டு சந்தா Rs.120-

● இதழ் மொத்தமாக வேண்டுவோர், சந்தாதாரர்கள் குறைபாடுகள் விஷயமாக தொடர்பு எண்: 09742899305 / 07353307054

Published from:

**House of Peace,**

PO Box no. 1726, No.8, 4th main, 2nd cross, LB Sastri nagar,
Bangalore 560017

**Ph. 9886001357 email: amkasim@yahoo.com**

From
**House of Peace**
PO Box No. 1726
Bangalore 560 017

Registered news paper in India No. KARTAM/2007/28173
Regd under Postal Regn. No.KRNE/BGE/1057/2015-2017
Posted at BANGALORE PSO, MYSORE ROAD, BANGALORE 560026 on 25th or 26th or 27th of every month. No of pages: 24+4.
Licenced to post without prepayment License No.WPP-308

**(PRINTED MATTER)**

To

...........................................................................

...........................................................................

...........................................................................

...........................................................................

## ஈடில்லா கருணையாளனே என் இறைவன்

இறைவன் வானவர்களிடம் இவ்வாறு கூறுகிறான்: என் அடியான் ஒரு தீமையைச் செய்ய நாடினால் அதை அவன் செய்யாதவரை அவனுக்கெதிராக அதைப் பதிவு செய்யாதீர்கள். அதை அவன் செய்தால் செய்த குற்றத்தை மட்டுமே பதிவு செய்யுங்கள். அதை அவன் எனக்காக விட்டுவிட்டால் அதை அவனுக்கு ஒரு நன்மையாகப் பதிவு செய்யுங்கள். அவன் ஒரு நன்மை புரிய எண்ணிவிட்டாலே அதைச் செய்யாவிட்டாலும் கூட அவனுக்கு ஒரு நன்மையை எழுதுங்கள். அதை அவன் செய்துவிட்டாலோ அதை அவனுக்கு பத்து நன்மைகளிலிருந்து எழுநூறு நன்மைகளாக எழுதுங்கள் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூஹுரைரா(ரலி) அறிவித்தார். (புகாரி 2225)